# வலயக்கல்வி அலுவலகம் - வரமராட்சி
## புவியியல் மாதிரி வினாத்தாள்-1

தரம் -13 (2020) நேரம்: 3மணி 10 நிமிடம்

**அறிவுறுத்தல்கள்:**

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது. பகுதி- 1, 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி -1 இற்கான விடைகள் இவ்வினாத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்.
- பகுதி- 1 இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒருபுள்ளி உரித்தாகும்.
- பகுதி-11 இலுள்ள வினாக்கள் இரண்டிற்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி - 111 இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.

## பகுதி 1

ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையினைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. 1:50 000 என்னும் அளவுத்திட்டத்தில் அமைந்த 48 சதுர கிலோமீற்றர் பரப்புடைய நெற்காணி ஒன்றின் நீள அகலங்கள் முறையே

   1.12cm*4cm 2.16cm*6cm 3.32cm*6cm 4.14cm*3cm 5.16cm*3cm ( )

2. உண்மையான நிலத்தோற்றத்தில் காணக்கூடிய பௌதிக மற்றும் பண்பாட்டம்சங்களை முடியுமான வரை ஒரு படத்தில் அளவுத்திட்டத்திற்கு ஏற்ப முன்வைப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சியாக கருதப்படமுடிவது

   1. இலங்கையின் நீர்ப்பரம்பல் 2.உலகின் இயற்கைத் தாவரப்பரம்பல்

   3 .உலக அரசியல் பிரிவுப்படம் 4.தரைத்தோற்றப்படம்

   5. இலங்கையின் தரைத்தோற்றவேறுபாடு ( )

3. தாழ் சமவுயரக்கோடுகள் நெருக்கமாகவும், உயர் சமவுயரக்கோடுகள் ஐதாகவும் அமைவதால் காட்டப்படும் சாய்வு

   1.மென்சாய்வு 2.குழிவுச்சாய்வு 3.குவிவுச்சாய்வு 4.குத்துச்சாய்வு 5.சரிவுச்சாய்வு ( )

4. கண்டல் தாவரங்களின் பரம்பலைக் காட்டப் பயன்படுத்தப்படும் படத்தாள் பகுதிகள்

   1.சிலாபம்,கொழும்பு 2.தம்புள்ள,அவிசாவளை 3.மகியங்கனை,நுவரெலியா

   4.அனுராதபுரம்,மதவாச்சி 5கல்கமுவ,மட்டக்களப்பு ( )

5. கடதாசிகளில் அச்சிடப்பட்ட படங்களைத் தயாரிப்பதற்குப் பயன்படும் உபகரணங்கள் அல்லாதது

   1.விமான ஒளிப்படம் 2.செய்மதிகள் 3.திசைகாட்டி 4.தியோடலைற் 5.சங்கிலி நாடா ( )

VadaZICTEC

6. பூகோள இடநிலைப்படுத்தல் முறைமையின் (GPS) பிரதான கூறுகள்

1.வான்வெளிக்கூறு, கட்டுப்பாட்டுக்கூறு, பயனாளிகள் கூறு

2.தரைக்கட்டுப்பாட்டுக்கூறு, விண்வெளிக்கூறு, செய்மதிக்கூறு

3.கட்டுப்பாட்டுக்கூறு, வான்வெளிக்கூறு, விண்வெளிக்கூறு

4.தரைக்கட்டுப்பாட்டுக்கூறு, விண்வெளிக்கூறு, பயனாளிகள்கூறு

5.விண்வெளிக்கூறு, செய்மதிக்கூறு, கட்டுப்பாட்டுக்கூறு ( )

7. பின்வரும் படவரைகலையியல் முறைகளுள் தொடர்ச்சியான தரவுகளை முன்வைப்பதற்கு பயன்படுத்தக்கூடிய வரைபு

1.புள்ளிப்படம் 2.கோட்டுப்படம் 3.பார்வரைபு 4.பிரிக்கப்பட்டவட்டவரைபு

5.பாய்ச்சல் வரைபு ( )

8. காலநிலை மற்றும் வானிலை தொடர்பான தரவுகளைச் சேகரிப்பதற்குப் பயன்படும் ஆய்வுமுறை.

1.வினாக்கொத்து 2நேர்காணல் 3.அளவீடுகள் 4.அவதானிப்பு 5.படிமங்கள் ( )

9. தரவுப்பரம்பலில் மொத்தப்பெறுமானங்களில் Q1க்கும் Q3க்கும் இடையில் அமைந்து காணப்படுவது.

1.மேற்காலணை 2.இடையம் 3.கீழ்க்காலணை 4.இடை 5.வீச்சு ( )

10. நாடொன்றின் சனத்தொகையில் பால் விகிதத்தை எடுத்துக் காட்டுவதற்கு மிகவும் பொருத்தமான வரைபடம்

1.கோட்டுவரைபடம் 2.இரட்டைபார்வரைபு 3.வட்டவரைபு 4.கூம்பகவரைபு 5.இடக்கணியப்படம் ( )

11. புவியை நோக்கி வருகின்ற விண்கற்களின் எரிதல் செயற்பாடு இடம்பெறும் வளிமண்டலப் படையமைப்பு.

1.மாறன்மண்டலம் 2.படைமண்டலம் 3.இடைமண்டலம் 4.வெப்பமண்டலம்

5.புறமண்டலம் ( )

12. பின்வருவனவற்றுள் எது வளிமண்டல வாயுக்களின் சேர்க்கையை இறங்கு வரிசையில் சரியாகக் காட்டுகின்றது

1.நைதரசன், ஒட்சிசன், மெதேன், கீலியம் 2.நைதரசன்,ஒட்சிசன்,கீலியம்,காபனீரொக்சைட்

3.நைதரசன், ஒட்சிசன்,மெதேன்,ஓசோன் 4.நைதரசன்,ஒட்சிசன்,ஆகன், காபனீரொக்சைட்

5.நைதரன்,கீலியம், காபனீரொக்சைட்,ஓசோன் ( )

VadaZICTEC

13. புவியின் மொத்த நீரின் கனவளவு

1.1368 கன மில்லியன் கியூபிக் மீற்றர்  2.1386 கன மில்லியன் கியூபிக் மீற்றர்

3.1836 கன மில்லியன் கியூபிக் மீற்றர்  4.1386 மில்லியன் கன கியூபிக் மீற்றர்

5.1683 கன மில்லியன் கியூபிக் மீற்றர் ( )

14. புவியின் மத்தியின் அமுக்கம், 1cm2 இற்கு எத்தனை மில்லியன் கிலோகிராம் எனக் குறிப்பிடப்படுகின்றது

1. 2.15  2. 3.15  3. 4.15  4. 5.15  5.1.15 ( )

15. தாவரசுவட்டு அடையற் பாறையாகக் கொள்ளக்கூடியது.

1.ஜிப்சம், எலைட்  2.காபனேற், தொலமைற்  3.சேறு, களி  4.மணல், மாக்கல்

5.பீட், நிலக்கரி ( )

16. சிலாபத்தின் வடக்கில் தப்போவ, ஆண்டிகம, பள்ளம ஆகிய பிரதேசங்களின் ஒடுங்கிய பகுதிகளில் காணப்படும் இலங்கையின் பாறைவகை

1.யுராசிக் பாறை  2.மயோசின் பாறை  3.சாணோகைற் பாறை

4.கொண்டலைற்பாறை  5.வன்னித்தொகுதிப்பாறை ( )

17. பொரலஸ்கமுவ, மிட்டியாகொட, வஸ்கமுவ பகுதிகளில் காணப்படும் பாறை வகை.

1.லிமோனைட்  2.மாணிக்கக்கல்  3.காரீயம்  4.களி  5.உப்பு ( )

18. பனிக்கட்டி ஆற்றினால் உருவாக்கப்படும் படிதல் நிலவுருவங்களைக் கொண்டிராத தொகுதி.

1.நீள்குன்றுகள், நீள்மணற்குன்றுகள்  2.படிவுத்திட்டை, குத்துப்பாறைவாற்குன்று

3.அறைபாறைக்களி, எசுக்கர்  4.எசுக்கர், முனைவுப்படிவு

5.பட்டைப்படிவு, படிவுத்திட்டை ( )

19. படை மண்டலத்தின் மேல், மேலும் வெப்பநிலை குறைவடைந்து குளிரான நிலையை அடைதல்.

1.உலர் நழுவுவீதம்  2.உலர் வெப்ப நழுவு வீதம்  3.ஈரநழுவுவீதம்

4.ஈர உலர் நழுவு வீதம்  5.வெப்பநிலைமாறல் ( )

20. நிலத்தின் மீது அல்பீடோ தெறிப்படையும் அளவு.

1. 16%  2. 10%  3. 2%  4. 90%  5.100% ( )

21. பொதுச்சுற்றோட்டத்தில் உள்ளடங்கும் காற்றுத்தொகுதி

1.வியாபாரக்காற்று, மேலைக்காற்று, முனைவுக்காற்று

2.சூறாவளி, முரண் சூறாவளி, அயனச்சூறாவளி

3.பருவக்காற்று, கடற்காற்று, தரைக்காற்று

4.பருவக்காற்று, சூறாவளி, வியாபாரக்காற்று

5.வியாபாரக்காற்று, பருவக்காற்று, முனைவுக்காற்று ( )

VadaZICTEC

22. பூகோள பச்சைவீட்டு வாயுவை வெளியிடும் பிரதான துறைகளை இறங்குவரிசையில் கொண்ட தொகுதி.

1.கைத்தொழில், காடழிப்பு, விவசாயம், போக்குவரத்து

2.கைத்தொழில், வலுச்சக்தி, காடழிப்பு, விவசாயம்

3.வலுச்சக்தி, கைத்தொழில், காடழிப்பு, விவசாயம்

4.வலுச்சக்தி, கைத்தொழில், விவசாயம், காடழிப்பு

5.கைத்தொழில், வலுச்சக்தி, விவசாயம், காடழிப்பு ( )

23. இடைவெப்ப வலயப் புல்நிலங்களைக் கொண்ட தொகுதி.

1. பிறேயறீஸ், கொலம்பியா, பம்பாஸ், டவுண்ஸ்

2. சவன்னா, கம்பொஸ், லாணோஸ், கொலம்பியா

3. ஸ்ரெப்பீஸ், பம்பாஸ், டவுண்ஸ், வெல்ட்

4. பிறேயறீஸ், கம்பொஸ், வெல்ட், டவுண்ஸ்

5. ஸ்ரெப்பீஸ், கம்பொஸ், வெல்ட், டவுண்ஸ் ( )

24. கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்ட கரையோரப்பாதுகாப்புத்திட்டம் அல்லாதது.

1.1980ம் ஆண்டு கரையோரப் பாதுகாப்புத் திட்டம்

2.1990ம்ஆண்டு கரையோரப்பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான பாரிய திட்டம்

3.1992ம் ஆண்டு கரையோரப் பாதுகாப்புத் திட்டம்

4.1997 ம் ஆண்டு கரையோரப் பாதுகாப்புத் திட்டம்

5.2004 ம் ஆண்டு கரையோரப் பாதுகாப்புத் திட்டம் ( )

25. தென்னாசிய சூழலியல் ஒத்துழைப்பு வேலைத்திட்டத்தில் சுற்றுலாக்கைத்தொழிலுக்கு பொறுப்பான நாடு.

1.இந்தியா 2.இலங்கை 3.பாகிஸ்தான் 4.ஈரான் 5.நேபாளம் ( )

26. பிறப்பு, இறப்பு வீதம் குறைவாகவும், ஆயுள் எதிர்பார்ப்பு உயர்வாகவும் முதியோர் சனத்தொகை சிறிது அதிகரித்து இருக்கும் சனத்தொகைப்பிரமிட்டின் வடிவம்

1.ஆரம்பக்கட்டம் 2.விரிவடையும் கட்டம் 3.நிலையான கட்டம்

4.சுருங்கும் கட்டம் 5.தொடக்கக்கட்டம் ( )

27. இலங்கை சனத்தொகை வளர்ச்சியின் இடரீதியான பரம்பலில் மிகக் குறைவான வருட சனத்தொகை வளர்ச்சியைக் கொண்ட மாவட்டங்கள்

1.நுவரெலியா, பதுளை 2.குருநாகல், அம்பாறை 3.அம்பாறை, புத்தளம்

4.களுத்துறை, அனுராதபுரம் 5.குருநாகல், பதுளை ( )

28. விவசாயத்துறையில் நவீன தொழினுட்பங்களை அறிமுகஞ் செய்து பசுமைப்புரட்சியை தோற்றுவித்த நாடாகக் கருதப்படுவது

1.கனடா 2.மெக்சிக்கோ 3.ஜப்பான் 4.இந்தியா 5.பிலிப்பைன்ஸ் ( )

VadaZICTEC

29. விவசாய உற்பத்திகளுக்கு நியாயமான விலையைப் பெற்றுக் கொடுப்பதற்கு இலங்கையில் உருவாக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையங்களைக் கொண்ட இடம் அல்லாதது.

1.தம்புத்தேகம, கேபிட்டிப்பொல, வெலிசறை 2.தம்புள்ள, இரத்மலானை, மீகொட

3.வெலிசறை, மீகொட, பண்டாரவளை 4.மீகொட, தெகிவளை, வெலிசறை

5.தம்புள்ள, தம்புத்தேகம, நரேகன்பிட்டி ( )

30. கனியநெய் உற்பத்தி மற்றும் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் எக்சோன் மொபில் (Exxon mobil) அமைந்துள்ள நாடு.

1.நெதர்லாந்து 2.சவுதிஅரேபியா 3.பிரித்தானியா 4.ஐக்கிய அமெரிக்கா

5.தென்னாபிரிக்கா ( )

31. நிலக்கரி தோன்றியதாகக் கருதப்படும் புவிச்சரிதவியல் காலம்.

1.காபோனிபரஸ் யுகம் 2.கேம்ரியன் யுகம் 3.பலியோசிக் யுகம்

4.பிளைத்தோசின் யுகம் 5.மயோசின் யுகம் ( )

32. அவுஸ்ரேலியாவில் இரும்புத்தாது வியாபித்துள்ள பிரதேசம்.

1.தென் சொர்க்கோவ் 2.செபீல்ட் 3.எமர்ஸ்ஸி 4.நியுசௌத்வேல்ஸ்

5.பேட்ஸ்மேன்பெயில் ( )

33. 1992 ம் ஆண்டு சுரங்க மற்றும் கனிப்பொருள் சட்டத்தின் 26 ஆவது உறுப்புரையில் இடம்பெறும் பிரதான விடயமாக அமைவது

1.கனிய அகழ்வு மற்றும் போக்குவரத்துஅனுமதிப்பத்திரத்தை வழங்கக்கூடிய அதிகாரம் புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப்பணியகத்திற்கு உரியதாகும்.

2.ஆறுகளின் ஆழ்பகுதியில் மண்ணகழ்வினை மேற்கொள்வதற்கு பிரதேசசெயலகத்தில் அனுமதியைப் பெற்றுக் கொள்வது அவசியமானதாகும்.

3.இலங்கையில் எந்தவொரு இடத்திலும் காணப்படும் கனியவளங்களின் உரித்துடைமை அரசுக்குரியதாகும்.

4.கனிய அகழ்வின் போது சூழல்நேய மனப்பாங்கோடு செயற்படுதல் தொடர்பான ஆலோசனைகளை பாடசாலைக் கலைத்திட்டத்தில் உள்வாங்கிக் கொள்ளல்.

5.கனிய அகழ்வின் போது ஏற்படும் சூழல்சார்பாதிப்புக்களைத் தவிர்ப்பதில் பொதுமக்களுக்குள்ள கட்டுப்பாடுகள். ( )

34. சர்வதேச நாணய நிதியம் பூகோளமயமாக்கல் பிரதானமாக எந்நான்கு துறைகளுடாக இடம்பெறுவதாக சுட்டிக்காட்டியுள்ளது

1.போக்குவரத்து, தொடர்பாடல், மூலதனம், இடப்பெயர்வு

2.வர்த்தகமும் பரிமாற்றமும், மூலதனம், இடப்பெயர்வு, அறிவினைப் பகிர்ந்து கொள்ளல்.

3.தொடர்பாடல், உட்கட்டமைப்பு விருத்தி, மூலதனம், போக்குவரத்து

4.வர்த்தகமும்பரிமாற்றமும், தொடர்பாடல், இடப்பெயர்வு, அறிவினைப் பகிர்ந்து கொள்ளல்.

5.வர்த்தகம், மூலதனம், தொடர்பாடல், உட்கட்டமைப்பு விருத்தி ( )

35. உலகில் மேற்கொள்ளப்படும் மூலதனம் சார்ந்த கைத்தொழில்களைக் கொண்ட விடைத்தொகுதி.

1.மோட்டார் வாகனம், இரும்புருக்கு
2.கப்பல் கட்டுதல், விமானப்பரும்படியாக்கம்
3.மோட்டார் வாகனம், விமானப்பரும்படியாக்கம்
4.இரும்புருக்கு, இலத்திரனியல்
5.கப்பல் கட்டுதல், இலத்திரனியல் ( )

36. ஐக்கிய அமெரிக்காவின் பல்தேசியக்கம்பனிகளைக் கொண்ட விடைத்தொகுதி.

1.மென்சன்ரோ, யுனிலெவர், கே.எப்.சி
2.மிற்சுய், மென்சன்ரோ, கே.எப்.சி
3.மென்சன்ரோ, கொக்ககோலா, கே.எப்.சி
4.யுனிலெவர், மெர்க், மிற்சுய்
5.மிற்சுய், மெர்க், கே.எப்.சி ( )

37. ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவ நாடுகளை உள்ளடக்கிய விடைத்தொகுதி.

1.பெல்ஜியம், நெதர்லாந்து, பிரான்ஸ்
2.பிரான்ஸ், லக்சம்பேர்க், மோல்டோ
3.மேற்கு ஜேர்மன், நெதர்லாந்து சுவீடன்
4.பெல்ஜியம், டென்மார்க், இத்தாலி
5.பிரான்ஸ், லக்சம்பேர்க், மோல்டோ ( )

38. பூகோளமயமாக்கலின் பிரதான பிரிவு அல்லாதது.

1.பொருளாதார பூகோளமயமாக்கல்
2.கலாசார பூகோளமயமாக்கல்
3.அரசியல் பூகோளமயமாக்கல்
4.சமூக பூகோளமயமாக்கல்
5.தொழினுட்ப பூகோளமயமாக்கல் ( )

39. நிலக்கரி வகைகளில் காபனின் அளவு மிகவும் குறைவாகக் காணப்படும் நிலக்கரி வகை.

1.பீட் நிலக்கரி
2.பழுப்பு நிலக்கரி
3.புகைமிகு நிலக்கரி
4.அனல்மிகு நிலக்கரி
5.அந்திரசைற்று ( )

40. வடமத்திய மாகாண பெருநகர வலயத்தில் உள்ளடங்கும் மாவட்டங்கள்.

1.பொலநறுவை, அனுராதபுரம், வவுனியா
2.பொலநறுவை,அனுராதபுரம்,திருகோணமலை
3. பொலநறுவை, அனுராதபுரம்,மட்டக்களப்பு
4. பொலநறுவை, அனுராதபுரம்,குருநாகல்
5. பொலநறுவை, அனுராதபுரம்,கண்டி ( )

VadaZICTEC

## பகுதி II

**1. இலங்கை நிலஅளவைத்திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1:50 000 என்ற அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. அப்படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

குறிப்பு:

- படத்தின் மேல் விடைகள் எழுதக்கூடாது.
- விடைத்தாளில், தொடர்புடைய வினா இலக்கத்தினையும், உபபிரிவு இலக்கத்தினையும் தெளிவாக குறிப்பிட வேண்டும்.
- உமது விடைத்தாளுடன் இடவிளக்கப்படத்தினை இணைக்க வேண்டாம்.

**i.** உமக்கு தரப்பட்ட இடவிளக்கப்படத்தில் 1 - 4 வரையான இலக்கங்கள் குறித்துக் காட்டும் அம்சங்களினை அதே ஒழுங்கில் பெயரிடுக? (2புள்ளி)

**ii.** நாற்பக்கல் "A" யினை 1: 25,000 அளவுத்திட்டத்தில் வரைந்து காட்டுக? (2 புள்ளி)

**iii.** நாற்பக்கல் "A" யில் காணப்படும்

a) இரண்டு சேவைநிலையங்கள்

b) இரண்டு சமயவழிபாட்டிடங்கள்

c) இரண்டு போக்குவரத்துப்பாதைகள்

d) இரண்டு பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் போன்றவற்றைப் பெயரிடுக? (4 புள்ளி)

**iv.** "B423" வீதி வழியாகக் காணப்படும் குடியிருப்பு வகையைப் பெயரிடுக? (1 புள்ளி)

**v.** உமக்கு வழங்கப்பட்டுள்ள இடவிளக்கப்படத்தில் செய்கை பண்ணப்படும் பிரதான பெருந்தோட்டப்பயிர் ஒன்றினைப் பெயரிடுக? (1புள்ளி)

**vi.** புள்ளிX இலிருந்து புள்ளிY க்கான குறுக்குவெட்டு முகத்தினை வரைக? (4புள்ளி)

**vii.** படப்பிரதேசத்தின் தரைத்தோற்றத்திற்கும் குடியிருப்புப்பரம்பலுக்கும் இடையிலான தொடர்பினை மூன்று அம்சங்களின் அடிப்படையில் விளக்குக? (6புள்ளி)

VadaZICTEC

**2. தரப்பட்டுள்ள உலகப்புறவுருவப்படத்தில் வழமையான நிறங்களையும், குறியீடுகளையும் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.**

**i.** யூரல் மலை

**ii.** மிசூரிமிசிசிப்பி நதி

**iii.** கினி வளைகுடா

**iv.** அரிசோனாப்பாலைவனம்

**v.** கருங்கடல்

**vi.** ஐஸ்லாந்தின் பிரதான எரிமலை

**vii.** காற்றின் வாரியிறக்கல் காரணமாக உருவான குவாட்ராப்பள்ளம் காணப்படும் நாடு

**viii.** உலகின் பிறப்பு வீதம் உயர்வாக உள்ள நாடு

**ix.** அவுஸ்ரேலியாவின் மிகக் குறைவான நகராக்கத்தைக் கொண்ட நாடு

**x.** இயற்கைப் பாதுகாப்பிற்கான சர்வதேச சங்கத்தின் (IUCN) தலைமையகம் காணப்படும் நகரம்

(10*1=10 புள்ளிகள்)

## பகுதி-111

**3.**

**i.** புவியியல் தகவல் முறைமை என்பதனை வரையறை செய்க? (2புள்ளிகள்)

**ii.** புவியியல் தகவல் முறைமையின் பிரதான கூறுகள் எவை? (3புள்ளிகள்)

**iii.** புவியியல் தகவல் முறைமையில் தரவுகள் களஞ்சியப்படுத்தும் முறைகளைக் குறிப்பிட்டு விளக்குக? (5 புள்ளிகள்)

**iv.** புவியியல் தகவல் முறைமையின் பயன்பாடுகள் நான்கினைக் குறிப்பிட்டு விளக்குக? (5 புள்ளிகள்)

**அல்லது**

**4.**

**i.** தொடர்ச்சியான தரவுகள் மற்றும் பின்னக தரவுகள் என்பவற்றை வேறுபடுத்துக? (2புள்ளிகள்)

**ii.** மையநாட்ட அளவீடுகளைக் குறிப்பிடுக? (3புள்ளிகள்)

**iii.** வினா 2 இல் நீர் குறிப்பிட்டவற்றை சுருக்கமாக விபரிக்குக? (5புள்ளிகள்)

**iv.** புடவரையியல் நுட்பங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக? (5புள்ளிகள்)



VadaZICTEC

**5.அட்டவணையில் தரப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக,**

**தரம் 13 இல் கற்கும் 30 மாணவர்கள் நிறைகள்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **55** | **60** | **70** | **86** | **54** | **53** | **44** | **36** | **59** | **65** |
| 46 | 47 | 33 | 69 | 80 | 43 | 45 | 39 | 38 | 65 |
| 60 | 65 | 38 | 59 | 49 | 46 | 32 | 72 | 61 | 70 |

**i.** நிறைகளை அடிப்படையாகக் கொண்டு கூட்டமாக்கப்பட்ட மீடிறன் பரம்பல் அட்டவணையினைத் தயாரிக்குக? (5 வகுப்பாயிடை) (2 புள்ளிகள்)


**ii.** இத்தரவிற்கான இடை, திரட்டு மீடிறன் என்பவற்றைக் காண்க? (5 புள்ளிகள்)

**iii.** மேலே அமைக்கப்பட்ட கூட்டமாக்கப்பட்ட மீடிறன் பரம்பல் அட்டவணையினைக் கொண்டு, இழையவரைபு, மீடிறன் பல்கோணி என்பவற்றை அமைக்குக? (5 புள்ளிகள்)

**iv.** உம்மால் அமைக்கப்பட்ட மீடிறன் பரம்பலை அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள் பெற்ற புள்ளிகளை சுருக்கமாக விளக்குக? (3புள்ளிகள்)

**அல்லது**

**6. இலங்கையின் பிறப்புக்கள், இறப்புக்கள்,சிசுமரணவீதங்களின் போக்குகள் 2006-2015 (தலா 1000பேருக்கு) வரையான எண்ணிக்கையை கீழே உள்ள அட்டவணை காட்டிநிற்கின்றது.**




மூலம்: நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு – வருடாந்த அறிக்கை, இலங்கை

**i.** மேலேதரப்பட்ட வரைபடத்தின் வகையினைப் பெயரிடுக? (2புள்ளி)

**ii.** வரைபடத்தின் படி, இலங்கையின் பிறப்புக்கள், இறப்புக்கள், மற்றும் சிசுமரணவீதங்களின் முனைப்பான இரு அம்சங்களினை விபரிக்குக? (4 புள்ளிகள்)

**iii.** மேலே தரப்பட்ட வரைபடத்தின் இரு பண்புகளை ஆராய்க? (4 புள்ளிகள்)

**iv.** இதே வகையான தகவலினை எடுத்துக் காட்டுவதற்குப் பொருத்தமான படவரைகலையியல் முறையொன்றினைக் குறிப்பிட்டு புனையா வரைபடத்தின் மூலம் விளக்குக? (5 புள்ளி)


N
Pahaladiggala
Kosgahahinna
Kumbukgolla
Kumbukgolla
Ihaladiggala
Wettehena
Moragolla
Kasgahahinna
Ralalerotawewa
Kandemoragolla
Palurotawewa
DEWAHUWA WEWA
Beliyakanda
Bambarakatupotha
Yatigalpotta
Siyambalawewa
Tinipitigama
Bambaragaswewa
Manahinda
Nilagama
GALEWELA
DIVISION
Dambawatawana
Galapitula
Damunumulla
Tholambugolla
Walaswewa
Puwakpitiya
Galwangedihena
Pawakpitiya
Walaswewa
Kapuhena
Patkolagolla
Migaskotuwa
Galewela
Nabadagahawatta
Galewela Hatamuna
Hombawa
Ranwediyawa
Pahala Bambawa
Dembagolla
Kospotha
Ranwediyawa
Ihala Bambawa
Bambawa
X
Y
P
Q
A
B
1
2
3
4
290
285
175
80°35'
180
7°45'
SCALE 1:50000

Va